# ஆஷான் பிள்ளை: இசைக்கச்சேரி வாழ்க்கை வரலாறு

ஆஷான் பிள்ளை தெற்கு ஐரோப்பாவைச் சார்ந்த பிரபல்யமான வியோலா வாத்தியக் கலைஞரும் ஆசிரியரும் ஆவார். பல ஆரம்பப் போட்டிகளில் ஈட்டிய வெற்றி காரணமாகவும், லண்டன், நியுயோர்க் ( விக்மோர் மண்டபம், போர்சல் ரூம், கார்னேஜி மண்டபம்) ஆகியவற்றில் நிகழ்த்திய அரங்கேற்றம காரணமாகவும், கிரிஸ்டோபர் ஹொக்வூட், கிறிஸ்டியன் சக்காரியஸ், பின்சாஸ் சுக்கர்மன் மற்றும் பலருடன் தனித்தும், கூட்டாகவும் நிகழ்ச்சிகளை நடாத்திய காரணமாகவும் உலகளாவிய ரீதியில் பல விழாக்களில் பங்குபற்றினார்.

உதாரணமாக, முக்கிய விழாக்கள் சில்ஸ்வீக் ஹொல்ஸ்டெய்ன் ( ஜேர்மனி), கசல்ஸ் (ஸ்பெய்ன். புயுரட்டோ ரிக்கோ, பிரான்ஸ்), குக்மோ (பின்லன்), ரவீனியா, அஸ்பென், டான்கில்வூட், சரசேட்டா (ஐக்கிய அமெரிக்கா), சல்ஸ்போர்க் ( ஒஸ்ட்ரியா), த புரோம்ஸ் (லண்டன்), பாண்வ் (கனடா) ஆகியன ஏனையவைகலாகும். ஆங்கிலேய, ஸ்கொட்லாந்து, அண்டோரன், செக்நாட்டு கூட்டுவாத்தியம், குல்பென்கியன் கூட்டுவாத்தியம், லிஸ்பன், என்செம்பில் மொடோ்ன் (பிரான்க்வோட்), லண்டன், நியுயோர்க் இசை ஆகியவற்றில் தனித்தும் கூட்டாகவும் வியோலா வாத்தியத்தை இசைத்துள்ளார்.

இலங்கையில் பிறந்த பிரித்தானிய பிரஜையான ஆஷான் பிள்ளை லண்டனிலும், லொஸ் ஏன்ஜல்ஸ்ஸிலும், நியுயோர்க்கிலும் ( ஜுலியட் பாடசாலை) ஜோன் வைட், கரேன் டட்டில், டொனால்ட் மக்கின்ஸ் ஆகியோருடன் கல்வி பயின்றார்.

1994- 1997 காலப்பகுதியில் டொர்ட்டிஸ், ரோம் ஆகிய இடங்களில் இடம்பெற்ற சர்வதேசப் போட்டிகளில் விசேட பரிசில்களை வென்றார். மேலும் றோயல் ஓவசீஸ் லீக், பார்க்லேன் குரூப், ஆர்ட்டிஸ் இன்டர்னேஷனல் ஆகியவை நடாத்திய போட்டிகளிலும் பரிசில்களை பெற்றார்.

மோபியஸ் என்சம்பிள் சம்மேளனத்தின் ஸ்தாபக அங்கத்தவர். ஓர்டக்கேஸ்ட்ரா என்சம்பிள் சம்மேளனத்தின் அங்கத்தவரும் ஆவார். ஸுக்கர்மான் கலைஞர்கள் சம்மேளனத்தின் சிறப்பான வியோலா வாத்தியக் கலைஞராக மிளிர்ந்தார். ஈ.எம்.ஐ, பெல், நாக்ஸோஸ், ஏ.எஸ்.வி., வேர்ஸோ, சேஜ் ஆகியவற்றுக்காக அமோகமாக இசைத்தட்டுகளை உருவாக்கியுள்ளார். தனித்து வியோலா வாத்தியத்தையும், பியானோவையும் ஸ்பானிய மொழியில் இசைப்பதற்குத் தம்மாலான முழுச் சாமர்த்தியத்தையும் வெளிக்கொணர்ந்துள்ளார். வூல்கான்க் ரிம், கவின் பிரயர்ஸ், கிறிஸ்டோர்வ் ஆகியோரதும், லெனாடோ பலடா, அன்டன் கர்ஷியா அப்ரில், ஜோடி சேர்வெலோ, வெல்டா போலோ போன்ற ஸ்பானிய கலைஞர்களின் ஆக்கங்களை முன்னின்று அரங்கேற்றியுள்ளார்.

1995-2000 ஆகிய காலப்பகுதியில் ஆங்கில ஓர்க்கிஸ்ட்ரா சம்மேளனத்தின் பிரி வியோலாவின் உதவி அதிபராகப் பணியாற்றினார். 2000ம் ஆண்டிலிருந்து பர்சிலோனியா சிம்பணி ஓர்ச்செஸ்ட்ரா அதிபர், ஈ.எஸ்.எம்.யு.சி, லிசோ கொண்சேர்வேட்டரிஸ் ஆகியவற்றின் வியோலா பேராசிரியராகச் செயற்பட்டதுடன் மட்ரிட் நகரில் உள்ள அல்வோர்ன்சோ எக்ஸ் பல்கலைக் கழகத்தில் வருகைதரு பேராசிரியராகக் கடமையாற்றினார். உலகளாவிய ரீதியில் குறிப்பிட்ட உயர் நிலை  வகுப்புகளை நடாத்தினார்.